**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, நிறுவனத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த

வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- நிறுவனமானது தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய“சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐயக் கடன்களுக்கான நிதியேற்பாட்டை மேற்கொள்ளும் நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளுக்கு 25 சதவீத ஐயக் கடன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5.55 மில்லியன் கடன் மீதியின் பொருட்டு ரூபா 1.39 மில்லியன் ஐயக்கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | 2009 ஆம் ஆண்டிற்கான கடன்பட்டோர் மீதிக்கான ஐயக் கடன் நிதியேற்பாடு 2020 தொடக்கம் சீராக்கல் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் கொள்கைப் பிரகாரம் ஐயக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிறுவனமும் ஒருங்கிணைந்து அமுலாக்கப்படும் ''நிலையாக்கும் விதிமுறையின் மூலம் அபாயத்தைக் குறைக்கும் செயற்திட்டம்'' அலுவலகத்தைப் பேணுவதற்கு கட்டிடம் ஒன்று வாடகைக்குப் பெறப்படவில்லை. எனினும், அச்செயற்திட்டத்திற்கான செலவினமாக ரூபா 1.81 மில்லியன் நிறுவனத்தினது கட்டிட வாடகையாகக் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டினது கட்டிட வாடகை அதேயளவு குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நிலையாக்கும் விதிமுறையின் மூலம் அபாயத்தைக் குறைக்கும் செயற்திட்ட அலுவலகத்தைப் பேணுவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடியபோது மாதாந்தம் ரூபா 500,000 எனும் பெரிய தொகையை வழங்குநர்கள் கோரியிருந்தனர். அதனால், ரூபா 150,000 போன்ற குறைந்த தொகையில் அலுவலகத்தைப் பேணுவதற்கான இடத்தைப் பெறுவதற்கு எமது நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் பொருட்டு அச்செயற்திட்டப் பணிப்பாளரது அங்கீகாரத்துடன் வாடகையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்படும் வாடகையை கட்டிடத்திற்கு வழங்கும் வாடகையில் ஈடு செய்யாது வருமானத்தையும் செலவினத்தையும் வெவ்வேறாக நிதிக் கூற்றுக்களில் காட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானத்தையும் செலவையும் ஒன்றுடனொன்று ஈடுசெய்யலாகாது. எவ்வாறாயினும், ரூபா 27.87 மில்லியன் கூட்டுத் தொகையுடைய ஏனைய செலவு மீதியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 15.31 மில்லியன் ஈடுசெய்யப்பட்டு வித்தியாசமாகிய ரூபா 12.56 மில்லியன் மாத்திரமே ஏனைய செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டு செலவினத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் செலவினத்தைக் குறித்த இடத்திலிருந்து கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் கடைப்பிடிக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் ஓராண்டிற்குள் தேறக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஓராண்டிற்கு மேற்பட்ட முதலீடு செய்யப்பட்டிருந்த நிறுவகத்தின் ரூபா 463.89 மில்லியன் நிலையான வைப்புப் பெறுமதி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் திருத்தம் மேற்கொள்ளப்படும். | நியமத்தில் குறிப்பிடப்பட்டவாறு சொத்துக்கள் வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்கள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திருந்த ரூபா 1.52 மில்லியன் குறித்த கணக்குகளில் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக | இது அனுப்பப்பட்டதை இனங்காண்பதற்கு இலக்கங்களோ எதுவித தகவல்களோ குறித்துக் கொள்ளப்படாது நேரடியாகவே பணமானது நிறுவனத்தின் கணக்கில் வைப்பிலிடப்பட்டதால் இந் | தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் தொகை இனங்காணப்படுவதற்கு விதிமுறை தயாரிக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நிலமை ஏற்பட்டது. கடனை அறவிடுவதற்கு நியமிக்கப்பட்ட குழு இயன்றவரையில் இத்தொகையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் இணங்காணப்படாத, அனுப்பப்பட்ட இத் தொகைக்கு முறையாக சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | அதனைச் சரிவர கணக்கில் சீராக்கல் செய்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு இலக்கம் 15 க்கமைய நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டமிடப்பட்ட தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட தொகை நிதிக் கூற்றுக்களில் வேறாக ஒரு வரியில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புஸ்ஸல நவோத்யா வித்தியாலயம் மற்றும் பதுளை வெவேகம மருத்துவமனையை அண்மித்த இடங்களில் மேற்கொண்ட மண்சரிவுக் குறைப்பிற்கான செயற்திட்டம் சம்பந்தமான நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றிருந்த ஒப்பந்தகாரர்கள் 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்த வேலைகளைக் கைவிட்டிருந்தனர். நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைக் குறைப்பதற்கு அந்த ஒப்பந்தாரர்களால் வழங்கப்பட்ட முற்பணப் பிணை முறிகளில் ரூபா 1.66 மில்லியன் மற்றும் அச்செயற்திட்டங்களது செயலாற்றல் பிணை முறியான ரூபா 1.57 மில்லியன் என்பன 2019 | இப் பிணைமுறித் தொகையை அறவிடுவதற்கு அவர்களுடன் கலந்துரையாடி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிறுவகத்திற்கு ஏற்படும் நட்டத்தை அறவிடுவதற்கு குறித்த பிணை முறியிலிருந்து தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | | |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 5.92 மில்லியன் பெற வேண்டியுள்ளதாக குறிப்பிட்டபோதும், அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதி கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாகக் காட்டப்பட்டிராமையால் அதனை அறவிடுவது நிச்சயமற்றதாக உள்ளது. அவ்வாறே, நிறுவனம் அறவிட வேண்டிய கேள்விப் பிணை வைப்பாகிய ரூபா 575,722 மற்றும் மண்சரிவு எச்சரிக்கை மதிப்பீட்டு அறிக்கை வெளியிடல் என்பவற்றின் பொருட்டு பிரதேச சபைகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 477,882 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப் படாதிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து இத்தொகையை அறவிடுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை, விளையாட்டுத் துறை அமைச்சு, பொதுத் திறைசேரி என்பவற்றிற்கு அமைச்சின் செயலாளரால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும், இதுவரை சாத்தியமாகவில்லை. இப் பிணை முறிகளுக்கான பணத்தை அறவிடுதல் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இத்தொகையை அறவிடுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | கடனை அறவிடுவதற்கு முறையான நடைமுறை கடைப்பிடிக்கப் படுதல் வேண்டும். |
| (இ) | கடனுக்கு சேவை வழங்குதல் நிறுவனத்தின் கொள்கை அல்ல. எனினும், சுற்றாடல் ஆய்வு மற்றும் சேவைகள் மற்றும் புவிச்சரிதவியல் மற்றும் பொறியியல் ஆகிய இரு பிரிவுகளாலும் மீளாய்வாண்டின்போது கடனுக்குச் சேவை வழங்குவதன் பொருட்டு 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முறையே ரூபா 4.08 மில்லியன் மற்றும் ரூபா 23.14 மில்லியன் என | கடனுக்கு வேலை செய்வது நிறுவகத்தின் கொள்கை அல்ல. எனினும், அரச நிறுவனத்திற்கான வேலைக்கு இக்கொள்கையிலிருந்து விலக வேண்டியுள்ளது. இக்கடன்பட்டோர் தொகையில் பெரும்பாலானவை அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியனவாகும். மேலும், குறித்த சேவை இந்த அரச நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்து | கடனை அறவிடுவதற்கு முறையான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுவதுடன் உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். |

| | |
|---|---|
| அறவிடப்பட வேண்டியிருந்தது. 2018 மற்றும் 2019 ஆகிய இரு ஆண்டுகளுக்குமான ரூபா 37.50 மில்லியனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கொள்ளப்பட்டே மேற்கொள்ளப்பட்டுமுள்ளன. |

### 1.6.2 கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 தொடக்கம் 2018 வரை கேள்வி வைப்பாகப் பெறப்பட்ட ரூபா 991,152 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த வழங்குநர்களை கேள்வி வைப்புக்களைப் பெறுமாறு கோரிய போதும், இதுவரை இவ்வைப்புக்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெளிக் கடப்பாடுகளைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2013 ஒக்டோபர் 09 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட தாபன விதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தினது 10.1 ஆம் பிரிவு | வார இறுதியிலும் அரச விடுமுறை நாட்களிலும் மாதாந்தம் 2 நாட்களுக்கு மேற்பட உத்தியோகத்தர்கள் பணி புரிவதாயின் அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாது 2 நாட்களுக்கு மேற்பட பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6.13 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் | அவசர இடர் நடவடிக்கைகள், துரிதமாகச் செய்ய வேண்டிய பணிகள் மற்றும் தாமதப்படுத்தாது பணம் செலுத்திப் பெற வேண்டிய ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைச் சேவைகள் என்பவற்றை முறைப்படி நிறைவேறுவதற்கு உத்தியோகத்தர்களை அரச விடுமுறை தினங்களில் பயன்படுத்த வேண்டியுள்ளது. மேலும், 135 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளின் கீழ் தேசிய கட்டிட ஆராய்ச்சி | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் ரூபா 918,920 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கும், அதிகாரமளிப் பதற்குமான அதிகார வரம்பு இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது தலைமையின் கீழ் நடைபெற்ற இடைக்கால முகாமைத்துவ குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுஎதிர்காலத்தில் இக்கொடுப்பனவுகளை முறையாக்குவதற்கு 03/2020 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தினது 7 ஆம் பிரிவு | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவை வழங்கவும் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் 20 மணி நேர மேலதிக நேர வேலைக் கொடுப்பனவை வழங்கலாம். எவ்வாறாயினும், அதற்குக் கூடிய கொடுப்பனவுகளுக்கு அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சின் செயலாளரது அங்கீகாரமின்றி அதிகூடிய வரம்பை மீறி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவசர இடர் நடவடிக்கைகள் துரிதமாக நிறைவேற்ற வேண்டிய பணிகள் மற்றும் தாமதம் செய்ய முடியாத பணம் வழங்கிப் பெற வேண்டிய ஆலோசனை மற்றும் பரிசோதனைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு மாதாந்தம் 20 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட கடமை ஆற்ற வேண்டியுள்ளது. இது தொடர்பாக அமைச்சின செயலாளரது பங்குபற்றலுடனான தே.க.ஆ.நி உள்ளக முகாமைத்துவக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த அதிகாரப் பகிர்வின் கீழ் 100 மணித்தியாலங்கள் வரை அங்கீகாரம் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அளிப்பதற்கான அதிகாரம் நிறுவனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், இக்கொடுப்பனவை முறையாக்குவதற்கு 03/2020 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. எதிர்காலத்தில், தொடர்ச்சியாகப் பணி ஆற்றுவது மட்டுப்படுத்தப்படும். | |
| (இ) | 2016 ஏப்ரல் 04 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 13.2 ஆம் பந்தி | தாபன விதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தின் 6.1 உப விதியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக மேலதிக நேர வேலை மணித்தியாலத்திற்கான கொடுப்பனவை தீர்மானித்து மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டமையால் 2019 ஆம் ஆண்டில் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவாக ரூபா 8.83 மில்லியன் மற்றும் அதற்கு ஏற்புடையதாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் ரூபா 1.32 மில்லியன் நிறுவனத்தால் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் ஆரம்பத்திலிருந்தே கடைகள் மற்றும் ஊழியர்கள் அலுவலக அதிகாரச் சட்ட ஏற்பாடுகளின்படி நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, 1 மணி நேர மேலதிக வேலைக்கு 1 ½ மணிக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 02/2016 க்கமைய 2020.07.01 தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றோம். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 104 ஆம் நிதிப் பிரமாணம் | கையிருப்புக் கட்டுப்பாட்டில் நிலவிய குறைபாடுகள் காரணமாக 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நேரடிச் சரி, பிழை பார்த்தல் பெறுமதிக்கும் கையிருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்குமிடையே ரூபா 400,824 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த இழப்பை ஈடு செய்வதற்கு இந்நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இச்சீராக்கல் எழுதுகருவி வகைப் பொருட்களுக்கான சீராக்கல் ஆகும். பொருட்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் சில வழங்கல்கள் பேரேட்டில் பதியப்படாமையினால் கையிருப்புப் பெறுமதியை விட அதிகளவு பெறுமதி பேரேட்டில் உள்ளது. இதற்கான கணக்கிணக்கக் கூற்று எதிர்காலத்தில் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | குறைவுக்கான தொகையை குறிப்பிட்ட நபர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.8 வரிப் பிரணமாங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனம் தயாரித்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கையின் பிரகாரம் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 1.12 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த வரியானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக ரூபா 2.54 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, நிறுவகத்தின் பெறுமதி சேர் வரி அறிக்கைப் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு மீள் நிரப்பப்படக் கூடிய பெறுமதி சேர் வரி ரூபா 7.31 மில்லியனாகும். எனினும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 10.06 மில்லியன் ஆகக் காட்டப்பட்டிருந்தது. | இதற்கான கணக்கிணக்கக் அறிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரியைச் சரிவர கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 55.24 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 63.68 மில்லியன் ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 8.44 நலிவு அவதானிக்கப்பட்டது. நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் குறைந்தமையே இந்நலிவுக்கான முக்கிய காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களது போக்கு தொடர்பான பகுப்பாய்வு

#### 2.2.1 ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் மிகையானது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் அதிகரித்தல் அல்லது குறைதல்

புவிச்சரிதவியல் மற்றும் பொறியியல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளின் மிகை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 17 முதல் 20 சதவீதம் ஆகவிருந்தது. சுற்றாடல் ஆய்வு மற்றும் சேவைகள், மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் எச்சரிக்கை முகாமைத்துவம், மனிதவள குடியிருப்புத் திட்டம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கட்டிடப் பொருள் பரிசோதனை ஆகிய பிரிவுகள் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 0.50 முதல் 30 சதவீத வீழ்ச்சி அடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்குவதற்கு அதிகாரச் சட்டம் ஒன்றை தயாரிப்பதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புக்கு 2010 யூன் 02 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்தப் பெற்றிருந்தது. அதற்கமையத் தயாரிக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தின் வரைவு 2012 செப்டம்பர் 10 ஆந் திகதியன்று சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், குறித்த அதிகாரச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது 2019 டிசம்பர் 31 வரை நடைபெறவில்லை. | எமது நிறுவனத்திற்குரிய அமைச்சு மற்றும் பரப்பெல்லை என்பன பல தடவைகள் மாற்றத்துக்குள்ளாகி திருத்தம் செய்யப்பட்ட அதிகாரச் சட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்ந்தும் ஆய்வு செய்யப்படுகின்றது. அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். | அதிகாரச் சட்டத்தை துரிதமாக அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுதாயத்தின் மூல இடர்களைக் குறைத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கும் மண்சரிவுப் பகுதிகளை இனங்காண்பதற்குமான முறைமையின் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா 7.62 மில்லியன் குறித்த பணியின் பொருட்டு 2019 டிசம்பர் 31 வரை பயன்படுத்தப்படாதிருந்தது. மண்சரிவு அபாயத்தைக் குறைக்கும் பிரிவுக்கு 2015 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியால் அமுலாக்குவதற்கு பெறப்பட்ட ரூபா 5 மில்லியன் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியன்றும் பயன்படுத்தப்படாதிருந்தது. | எதிர்காலத்தில் தேவைக்கேற்ப இத்தொகை பயன்படுத்தப்படும். | நன்கொடை மற்றும் நிதியேற்பாடு என்பன குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள் தாமதமடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மண்சரிவு அபாயத்தை குறைப்பதற்கான செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது பொதுத்திறைசேரியால் நிறுவகத்திற்கு ரூபா 200 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அத்தொகையில் ரூபா 35 மில்லியன் குறித்த விடயத்திற்குப் பொருத்தமற்ற விசேட நிலப் பரிசோதனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் எஞ்சிய ரூபா 165 மில்லியனைப் பயன்படுத்தி செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 160.18 மில்லியனுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு | பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் ரூபா 35 மில்லியன் விசேட நிலப் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு மாற்றஞ் செய்யப்பட்டது. 02 செயல் நடவடிக்கை திட்டங்களது வேலைகள் முற்றாக நிறைவடைந்துள்ளன. ஏனைய வேலை 2020 மார்ச் 31 ஆந் திகதியளவில் முடிவடைவதற்குத் திட்டமிடப்பட்டபோதும் நாட்டின் நிலைமை காரணமாக அத்தினத்தில் பூர்த்தியாகாது அவ்வேலை யூலை 15 ஆந் திகதி முடிவடைவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | ஒப்பந்த வேலைக்குச் சரிவர மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த வேலையை திட்டமிட்டபடி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 132.92 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் இந்த 08 செயற்திட்டங்களதும் நிர்மாண வேலைகள் நிறைவடைய வேண்டியபோதும், அந்நடவடிக்கைகள் முடிவடையவில்லை. | | |
| (ஆ) | ஆராய்ச்சி நிறுவனத்தால் நிர்ணயிக்கப் பட்டவாறிருக்கும் புதிய அலுவலகம் மற்றும் ஆய்வுகூடக் கட்டிடம் நிர்மாணிக்கப்படுவதற்கான ஒப்பந்தமானது ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான காரணமின்றி 623 நாட்கள் நீடிக்கப்பட்டது. தாமதக் கட்டணமாக 162 நாட்களுக்கு ரூபா 1.62 மில்லியன் அறவிடப்படவில்லை. ஒப்பந்தத்தின் பொருள் அளவைப் பத்திரத்தில் ஏற்பட்ட வேலை வேறுபாட்டிற்கு ரூபா 43.12 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், அதன் பொருட்டு பொருட் கொள்வனவு வழிகாட்டலின் 8.13.4 பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை. கட்டிட நிர்மாண வேலை தாமதமடைந்ததால் நிறுவனத்தின் பல பிரிவுகளையும் பேணுவதற்குப் பெறப்பட்ட கட்டிட வாடகை 2019 ஆம் ஆண்டின்போது ரூபா 6.36 மில்லியனாக இருந்தது. நிர்மாண வேலைக்கு நிறுவன உத்தியோகத்தர்களது பங்களிப்புக்கென ரூபா 9.60 மில்லியன் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | • இக்கட்டிடத்தின் நிர்மாண வேலை வரம்புக்குட்பட்ட இடத்தில் நடைபெறுவதுடன் பகல் பொழுதில் நிறுவகத்தில் உள்ள வாகன நெரிசல் காரணமாக கொங்கிறீட் டிரக்கை கொண்டுவர வசதி இல்லாமை.<br>• பின்னர் நிரப்புவதற்கான (BACK FILL) மண்ணைக் கொண்டு வருவதற்கு புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் அங்கீகாரம் கிடைக்காததால் கட்டிட நிர்மாண வேலை ஏறக்குறைய தாமதமாகியது.<br>• முழுத் திட்டத்தையும் ஒப்பந்தத்தையும் செயற்படுத்திய வாறிருக்கையில் நவீன ஆய்வுகூட, உபகரணங்களைக் கொள்வனவு செய்ததன் காரணமாக அவ்வவ்போது திட்டத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டது.<br>• மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களுக்கேற்ப Stiffner Column அதிகரிக்கப்பட வேண்டி ஏற்பட்டது. இதனால் மேலதிக நேரமும் வேலையும் ஏற்பட்டது. | மேலதிக நேரத்திற்காக கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், விலகல் 34 சதவீதமானமையால், அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். மேலதிக செலவின கட்டுப்பாட்டின் மூலம் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

- கேட்போர் கூடத்தினது அளவை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு மேலதிக காலம் தேவைப்பட்டது.
- கால நிலை சீரற்றுப் போனதாலும் கட்டிட நடவடிக்கைகள் தாமதமாகின.

மேற்படி விடயங்கள் ஒப்பந்தக்காரரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாதலால் அவருக்குக் கால நீடிப்பு கட்டணம் அறவிடப்படாது போனதுடன் பொருள் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் செயலாளரது அங்கீகாரமானது ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டால் மாத்திரமே பெறப்பட வேண்டும். மேலதிகச் செலவினம் ஏற்பட்டபோதும், கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல மாற்றங்களும் நிறுவனத்தின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவையின் பொருட்டே என்பதால் நிறுவனம் அதனால் நெடுங்காலப் பயனைப் பெறுவதால் நிறுவனம் இழப்பிற்குள்ளாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4. பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தலைமை அலுவலகத்திற்கு வாகனங்களை வழங்குவதற்கான கேள்விகளைக் கோரும் | 2017 ஆம் ஆண்டில் வாகனங்களை வழங்குவதற்கு பிறைம் டுவர்ஸ் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | உண்மையானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான தகவல்களின் அடிப்படையில் பொருட் கொள்வனவு வழிகாட்டியின் |

| | | | |
|---|---|---|---|
| | போது குறைந்த கூறு விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனம் ஒப்பந்தம் மறுக்கப்பட்டோரது நிரலில் சேர்க்கப்பட்ட நிறுவனமாகத் தவறான கருத்தைத் தெரிவித்து அந்நிறுவனம் மதிப்பாய்வு செய்யப்படாது மற்றுமொரு நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கியமையால் நிறுவனம் வருடாந்தம் ரூபா 5.47 மில்லியனை மேலதிகமாகச் செலவழிக்க வேண்டியேற்பட்டது. அவ்வாறே, மாவட்ட அலுவலகத்திற்கு வாகனங்களை வழங்கும் நிறுவனத்திடமிருந்தே மாதாந்தம் ரூபா 132,000 வாடகையாகச் செலுத்திப் பெறப்பட்ட கெப் வண்டியின் சேவை நிறுத்தப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு வாகனங்களை வழங்கும் நிறுவனத்திடமிருந்து மாதாந்தம் ரூபா 185,000 வாடகைக் கொடுப்பனவில் கெப் வண்டி ஒன்று பெறப்பட்டிருந்தது. அதன் பொருட்டு வருடாந்தம் ரூபா 636,000 மேலதிகமாக நிறுவனம் வழங்க வேண்டியேற்பட்டது. | எனினும், அந்த நிறுவனம் முறையாக வாகனங்களை வழங்காமையால் NBRO/DPC.2017.078 இலக்கமுடைய 2017.11.01 ஆந் திகதிய கேள்வித் தீர்மானத்தின் பிரகாரம் பிறைம் டுவர்ஸ் நிறுவனம் செயலற்ற நிறுவனமாகத் தீர்மானிக்கப்பட்டது. கேள்விகளுக்கான தீர்மானத்தில் அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகத்திற்கு வாகனங்களை வழங்கும் வழங்குநரால் வழங்கப்பட்ட டபள் கெப் வண்டி அகற்றப்பட்டதன் பின்னர் வேறொரு பொருத்தமான வாகனத்தை வழங்குவதற்கு தவறியமையால் தலைமை அலுவலக வாகனப் பெறுவனவுக்கு கேள்விகளைக் கோரும் போது டபள் கெப் வண்டிக்கும் கேள்வி பெறப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு கேள்விகள் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். நிறுவனம். அதிகூடிய இலாபத்தைப் பெறும் விதத்தில் பண்டங்களும் சேவைகளும் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | கடுவெல தொடக்கம் ஹங்வெலை வரை களனி கங்கையின் இரு கரையிலும் ஆரம்ப புவிச்சரிதவியல் பரிசீலனையை மேற்கொள்ளும் ஒப்பந்தத்தை நிறுவனம் பெற்றிருந்தது. | கேள்வி கோரல் குறித்த நிறுவனத்திற்கு பதிவுத் தாபல் மூலமும் இலத்திரனியல் அஞ்சல் மூலமும் வழங்கப்பட்டு கேள்வியைப் பகுப்பாய்வு செய்வதற்கு அனுபவமும் நியாயமானதும் | ஒப்பந்தத்தை மதிப்பாய்வு செய்யும் போதும் வழங்கும்போதும் வெளிப்படையான தோற்றம் நிலவ வேண்டும். சகல சந்தர்ப்பங்களிலும் பொருத்தமான பிணைமுறியைப் பெறுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அதற்குரிய கோன்பெனடிரேசன் பரீட்சை மேற்கொள்ளப் படுவதற்கு வரையறுக்கப்பட்ட கேள்வி கோரலின் மூலம் உப ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். கேள்விகளுக்கான நிறுவனத்தைத் தெரிவு செய்வதும் கேள்விகள் திறக்கப்படுவதும் வெளிப்படையாக அமையவில்லை. அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.4(ஈ) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் வெளி நபர் ஒருவர் இருக்கவில்லை. இதன் பொருட்டு கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 க்கமைய செயலாற்றல் பிணை முறி பெறப்படாததுடன் ஏற்றுக் கொண்ட ஒப்பந்தப் பெறுமதியிலும் கூடுதலாக ரூபா 1.4 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. | செய்முறையில் தேர்ந்ததுமான வெளிநபர் அங்கத்தவர்களைக் கொண்ட ஆலோசனைக் கம்பனி (யுவமமளெ) குறித்த காலத்துக்குள் அதனை நிறைவேற்றவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் எதுவும் வழங்கப்படவில்லை. அந்நிறுவனம் பணியை நிறைவேற்றிய அறிக்கையை எமக்கு வழங்குவதற்கு முன்னர் பணம் எதுவும் செலுத்தப்படலாகாது என தீர்மானிக்கப்பட்டது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிலத்தின் ஸ்திரமற்ற தன்மை தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப் படாததுடன் மொத்த மதிப்பீடும் எமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் அமைந்ததே ஆகும். ஆகவே, ஆகவே, குறித்த ஆராய்ச்சி முடிவடையும் போது நிலத்தின் உள்ளக வடிவத்தின் அடிப்படையில் ஆரம்ப மதிப்பீட்டிலும் கூடிய வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். | எடுக்க வேண்டும். அவ்வாறே, பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 386 ஆகும். எவ்வாறாயினும், 459 பேர் பதவியணியில் இருந்தனர். இதில் 117 பேர் நிரந்தர உத்தியோகத்தர்களாக | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பொருட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் 386 பதவியணியினருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பதவியணியில் நிரந்தர | குறித்த அங்கீகாரத்தை பெற்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அதிகரிக்காதவாறு இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| இல்லாதிருப்பது தெரிய வந்தது. | | ஊழியர்களுக்குப் புறம்பாக நிறுவகம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெறும் விசேட ஆலோசனை வேலைகளுக்குமென அடிக்கடி அமைய ஊழியர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களது வேலைக் கால முடிவில் அவர்கள் தீர நீக்கப்படுவர். எவ்வாறாயினும், இதற்மைய ஊழியர்களது சேவைக் காலம் யூன் 30 ஆந் திகதி முடிவடையவுள்ளது. | வேண்டும். |